# නැවත පදිංචි කිරීමේ අමාත්‍යාංශය

*කාර්යය සාධන වාර්තාව හා වාර්ෂික ගිණුම්*

***2012***

# மீள் குடியேற்ற அமைச்சு

**செயலாற்று அறிக்கையும் வருடாந்த கணக்கும்**

2012

# *Ministry of Resettlement*

*Performance Report and Annual Accounts*

***2012***

# மீள் குடியேற்ற அமைச்சு

## செயலாற்று அறிக்கையும் வருடாந்த கணக்கும்

## 2012

தலைப்பு - 145

இல -146

காலி வீதி,

கொழும்பு – 03.

## ➢ தொலைநோக்கு

"மீள்குடியேற்றத்தின் பின்னா் வெற்றிகரமான பொருளாதாரதத்திறகும் சமூகத்திற்கும் பயனுறுதி வாய்ந்ததாக பங்களிப்புச் செய்யக்கூடிய திருப்பதிகரமான ஓா் சமூகம்."

## ➢ பணிக்கடமை

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட மோதல் காரணமாக இடம் பெயா்ந்தவா்களை மீள் குடியேற்றி அவா்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கி மக்கள் வாழ்வை மேம்படுத்தக்கூடிய செயல் திறனான பயனள்ள அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் கௌரவமான பாதுகாப்புமிக்க மக்கள் சமூகம் ஒன்றை உறுதிப்படுத்தல்."

# உள்ளடக்கம்


**01. அறிமுகம்** 1

**02. நோக்கம்** 2

**03. அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்** 2

**04. இடம் பெயர்ந்த மக்களுக்கான ஒதுக்கீட்டு வசதிகள்** 3-4

04:01 பாதுகாப்பு

04:02 மீள்குடியேற்றம்

04:03 அத்தியாவசிய வேவைக்கான ஒதுக்கீடு

04:04 கீழ் கட்டுமானப் பணி மற்றும் வாழ்வாதாரவசதிகளுக்கான ஒதுக்கீடு.

04:05 இடம்பெயர்ந்த மக்களுக்கான உரிமைகளை பாதுகாத்தல்.

**05. வவுனியா மெனிக்பாம் அகதி முகாமை மூடிவிடல்** 5-6

05:01 நிவாரண கிராமங்களை பராமரித்தல்.

**06. வருடாந்த வேலை திட்ட இலக்கும் வெளியீடும் – 2012** 7

**07.ஒதுக்கீட்டுக்கணக்கு 2012** 8-10

07.01 மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவீனத்தின் சாராம்சம்.

07.01.01 செயல் முறைச் செயற்பாடுகள்

07.01.02 அபிவிருத்திச் செயற்பாடுகள்

**08. கருத்திட்ட ரீதியான மீண்டு வரும் செலவினம்.** 11-12

08.01 அமைச்சர் அலுவலகம் /அமைச்சு அலுவலகம்

08.02 போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்குடியமர்த்துதல் நிகழ்ச்சித்திட்டம்.

**09.கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவுகள்.** 13-15

09.01 செயல் முறைச் செலவுகள்.

09.01.01 அமைச்சர் அலுவலகம்.

09.01.02 அமைச்சு அலுவலகம்.

09.02 அபிவிருத்திச் செயற்பாடுகள்.

09.02.01 போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்குடியமர்த்துதல் நிகழ்ச்சித்திட்டம்.

**10. செலவீனத்தை நிதிப்படுத்துதல் பொழிப்பு** **16**

10.01 செயல்முறை / அபிவிருத்திச் செயற்பாடுகள்.

**11. செலவீனத்தை நிதிப்படுத்துதல்.** **17-18**

11.01 செயல் முறைச் செயற்பாடுகள்.

11.02 அபிவிருத்திச் செயற்பாடுகள்.

**12. அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் (ஆ) கணக்கு இணக்கக் கூற்று** **19-21**

12.01 தனிப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான மீதிக்கூற்று.

12.02 கட்டுப்பாட்டு கணக்கு

**13. கணக்காய்வு அறிக்கை** **22-23**

13.01 கணக்காய்வு விசாரணை

13.02 கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு

# அறிமுகம்

மீள்குடியேற்ற அமைச்சு 1651/20 இலக்க 2010/04/30 திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டது. மீள்குடியேற்ற அமைச்சின் தேசிய கொள்கைகளுக்கு இணைந்ததாகவும், மஹிந்த சிந்தனை அடிப்படையிலும் மீள்குடியேற்றம் சம்பந்தமான திட்டங்களையும் நிகழ்ச்சி நிரல்களையும் வடக்கு கிழக்கு பகுதிகளில் அமுல் படுத்தி வருகின்றது இவ்வமைச்சு அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் வழி நடத்தப்படுகின்றது.

மீள்குடியேற்ற அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் தொகை செயலாளர் அடங்கலாக 126 ஆகும். இதில் சிரேஷ்ட உத்தியோகத்தர்களாக 11 பேரும் மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களாக 04 பேரும் இரண்டாம் நிலை, மற்றும் ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களாக 111 பேரும் உள்ளடக்கப்படுகின்றார்கள்.

மேலதிகச் செயலாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர், பிரதான கணக்காளர், பணிப்பாளர் (அபிவிருத்தி) என்பவர்களுடன் அகில இலங்கை சேவையைச் சேர்ந்த 06 உத்தியோகத்தர்களும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களாக கடமை புரிகின்றார்கள்.

அத்துடன் இவ்வமைச்சின் கீழ் நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உதவியாளர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் கடமை புரிகின்றனர். இவர்கள் இவ்வமைச்சினால் அமுல்படுத்தப்படும் மீள்குடியேற்றம் சம்பந்தமான செயற்றிட்டங்களை ஒருங்கிணைத்தும் கண்காணித்தும் வருகின்றனர்.

**அமைச்சின் நோக்கங்கள்**

- நிவாரணக் கிராமங்கள் பராமரிப்பதன் ஊடாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்குரிய பாதுகாப்பு வழங்குதல் மற்றும் மனிதநேய உதவிகள் நிவாரணங்கள் என்பவற்றை வழங்குதல்.
- உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் அகதிகளாகச் சென்று மீள வருகின்றவர்கள் ஆகியோரை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தல்.
- இடம்பெயர்ந்த மக்களை மாற்று இடங்களில் குடியமர்த்துவதற்கு ஏதுவானதொரு சூழலை நிர்மாணித்தல் மற்றும் வசதிகளை அளித்தல்.
- அரசு மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் கூட்டமைப்புடன் குறித்த வசதிகள் வழங்குவதை உறுதிப்படுத்தல்.
- உதவி வழங்கும் நிறுவனங்களிடத்தில் இருத்து கிடைக்கப் பெறுகின்ற வழங்கள் பயனுள்ளவாறும் உரியவாறும் செலவிடப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல்.
- உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் அகதிகள் ஆகியோரை நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு பங்குகொள்ளச் செய்வித்தல், மற்றும் ஏனைய மக்களுடன் இணைந்து வாழ்வதற்கான மீளக்குடியமர்த்தும் செயற்பாட்டை உறுதிப்படுத்தல்.

**அமைச்சினால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள்**

- யுத்தம் காரணமாக பாதிப்புக்குள்ளாகிய பொது மக்களை மீளக்குடியமர்த்தல் நிவாரண சேவைகளுக்கான திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்தல்.
- ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம் ஐக்கியநாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் உலகவங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் மீளக்குடியமர்த்தும் பணிகளுக்காக உதவிகள் வழங்கும் கருத்திட்டங்களை கூட்டிணைப்பு செய்தல்.
- அகதிகளை மீள்குடியமர்த்தி அவர்களுக்கு அத்தியாவசிய சேவையை வழங்குதல்.
- மீள் குடியமர்த்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை கூட்டிணைப்புச் செய்தல்.
- பொது மக்களின் வாழ்க்கை முறையை இயல்பு நிலைக்கு மீட்டுவரும்போது அதனுடன் தொடர்புடைய அரசதுறை சார்ந்த அமைப்பாளர்களுக்கும் அரசசார்பற்ற அமைப்புகளுக்கும் உதவியளித்தல்.

- மீள் குடியமர்த்தும் பணிகளின்போது அரசு கொடை வழங்கும் நிறுவனங்கள் அரசு சார்பற்ற அமைப்புகள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றுக்கிடையிலான அலுவல்களை மேற்கொள்ளும்போது அவற்றுக்கிடையிலான கூட்டிணைப்புகளை இலகுவாக்குதல்.
- இடம்பெயர்ந்தவர்களை உரிய முறையில் குடியமர்த்தி நிவாரணக் கிராமங்களை மூடிவிடுதல்.

**இடம்பெயர்ந்த மக்களுக்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.**

**பாதுகாப்பு**

வடக்கு, கிழக்கு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிகமாக குடியமர்த்திய நிவாரணக் கிராமங்களை பராமரித்தல் மற்றும் அவர்களுக்கு ஆதரவளித்து பாதுகாத்தல் இவ் அமைச்சின் பிரதான நோக்கமாகியது. அதேபோன்று அவர்களது சொந்த இடங்களில் அல்லது மாற்று இடங்களில் குடியமர்த்தும் வரை அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் ஏனைய பொது வசதிகளையும் வழங்கி அவர்களை பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்பை உறுதி செய்துள்ளது.

**மீள்குடியமர்த்தல்**

மீள் குடியமர்த்துவதன் அடிப்படை முறை யாதெனில் இடம்பெயர்ந்தவர்களை அவர்களது சொந்த இடங்களில் அல்லது அவர்கள் விரும்புகின்ற தகுதிவாய்ந்த மாற்று இடங்களில் குடியமர்த்தலாகும். நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்ட்டுள்ள பிரதேசங்களில் நிலக்கண்ணிவெடிகளை அகற்றி பாதுகாப்பை உறுதிசெய்த பின்னர் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தலும், அவர்களின் சொத்துக்களை பயன்கொள்ளும் உரிமையும் அவர்களைச் சார்நதிருக்கும். ஆயினும் அப்பிரதேசங்களில் புதைக்கப்பட்டுள்ள நிலக் கண்ணிவெடிகளை அகற்றி அவர்களது அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்து கௌரவமாக வாழ்வதற்கான சூழலை அமைத்துக் கொடுத்தல் மீள்குடியமர்த்தும் பணியின் பிரதான அம்சமாகும். மீள் குடியேறும் மக்களுக்கு 6 மாதங்களுக்குத் தேவையான உலர் உணவு உலக உணவுத் திட்டத்தின் கீழும் வீடமைப்பு உதவித் தொகையாக ரூபா.25,000 மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் நாயகத்தின் உதவியுடனும் விவசாய உபகரணங்கள், போக்குவரத்து வசதி, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை வழங்குவதற்கும் அவர்களின் வாழ்வாதார மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு

வசதிகளை வழங்கி அவர்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**அத்தியாவசிய சேவைகள் நிறைவேற்றம்.**

வடக்கு மற்றும் கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல்கள் காரணமாக உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கு தேவையான சமைத்த உணவு உலர் உணவு இருப்பிட வசதி பாதுகாப்பு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் இப்பிரிவின் பிரதான நோக்கமாகும். வடக்கு மற்றும் கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல்கள் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்து, நலன்புரி நிலையங்களிலும் அதற்கு வெளியிலும் வாழும் அகதிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இடம்பெயர்ந்தவர்களுக்கான நலன்புரி நிலையங்களை பராமரிப்புச் செய்தல், மீள் குடியேற்றத்திற்கு வருகைதரும் குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்குதல் மற்றும் இடம்பெயர்ந்தவர்கள் சம்மந்தமான வேறு சேவைகளையும் வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**உட்கட்டமைப்பு வசதிகளை வகுத்தலும் வாழ்வாதார வழிகளை ஏற்படுத்துதலும்**

மீள்குடியமர்த்தும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்களை இயல்பு நிலைக்கு மீட்டுவருவதற்காக தேவைப்படும் பொருளாதார சமூக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை அளித்தல் வேண்டும். அதற்காக வீதிகள், மருத்துவமனைகள், பாடசாலைகள், அலுவலகங்கள், கட்டிடங்கள், மின்சாரம், எரிசக்தி சந்தை மற்றும் நீர் வழங்குதல் எனபவற்றை முதலாவதாக இயல்பு நிலைக்கு மீட்டுவருதல் வேண்டுமென்பதுடன் வீடுகளை பழுதுபார்த்தல், புணரமைத்தல் மற்றும் கட்டியெழுப்புதல் நடவடிக்கைகளை இரண்டாவதாக மேற்கொள்ளுதல் வேண்டும். சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் உள்நாட்டில் அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக அரசு செயற்பட்டுள்ளது. இவ்வமைச்சு வாழ்வாதார வழிமுறைகள் மற்றும் மனிதவள அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றை அமுல்படுத்துகின்றது.

**இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.**

இடம் பெயர்ந்த மக்களை தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தும் போது அவர்களுக்குத் தேவைப்படும் பொருளாதார, சமூக வசதிகள் என்பனவற்றை வழங்கி அவர்களது விருப்பப்படி தெரிவு செய்யும் இடங்களில் அல்லது சொந்த இடங்களில் குடியமர்த்தும்போது அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச கோட்பாடுகளுக்கேற்ப அவர்களது உரிமைகளை அதி உயர் மட்டத்தில் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம், ஐக்கிய நாடுகளின் சிறுவர்களுக்கான நிதியம் மற்றும் உரிமைகள் ஆணைக்குழுவுடன் கூட்டிணைந்து இது தொடர்பாக தேவைப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**வவுனியா மெனிக்பாம் நிவாரண கிராமத்தை மூடிவிடுதல்**

எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதிகளினால் பலவந்தமாக தடுத்துவைக்கப்பட்ட சாதாரண மக்களை அப்பிடியிலிருந்து மீட்டெடுப்பதற்காக பாதுகாப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகளினால் அப்பாவிப் பொதுமக்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு 2009 ஆம் ஆண்டு முதற் பகுதியில் வந்தடைந்தனர். ஒரு சிலர் தரைவழியாகவும் மேலும் சிலர் கடல் மார்க்கமாவும் வந்து சேர்ந்தனர். இவ்வாறு வந்தடைந்த மக்கள் ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக வவுனியா பிரதேசத்திற்கும், மேலும் ஒரு பிரிவினர் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை பிரதேசங்களையும் சென்றடைந்தனர். இவ்வாறு வந்தடைந்த மக்கள் பாடசாலை மற்றும் வணக்கஸ்தலங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கான பொது வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. அரச கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு பொது மக்களின் வருகை அதிகரிப்பின் காரணமாகவும் பொது வசதிகளுக்கு ஏற்படும் தடைகளை தவிர்த்துக்கொள்ளும் முகமாகவும், அரசாங்கம் துரித கருத்திட்டமாக நிவாரணக் கிராமங்களை அமைத்துக் கொடுத்துள்ளது. மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு ஏனைய அமைச்சுகளின் ஒத்துழைப்புடன் இந் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதனடிப்படையில் வவுனியா மெனிக்பாம் பிரதேசத்தை மையமாகக் கொண்டு ஆனந்தகுமாரசுவாமி, அருணாசலம், கதிர்காமர் மற்றும் இராமநாதர் நிவாரணக் கிராமங்கள் உருவாக்கப்பட்டன. இக்கிராமங்கள் முன்மாதிரிக் கிராமங்களாக உருவாக்கப்பட்டதுடன் அங்குள்ள மக்களுக்கு தேவையான சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

நிவாரண நிலையங்களாகக் கொண்ட பாடசாலை களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்பின்றி மேற்கொள்வதற்கு வலயம் 4, வலயம் 5, வலயம் 6 என்னும் கிராமங்கள் பின்னர் உருவாக்கப்பட்டன. இதன் பிரகாரம் பாடசாலை மற்றும் பொது இடங்களில் தங்கியிருந்த மக்கள் இங்கிருந்து தற்காலிகமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.அவர்களுக்குத் தேவையான வீடு, உணவு, (சமைத்த உணவு, உலர் உணவு) குடிநீர், மலசலகூடம், பாடசாலை, முன்பள்ளி பாடசாலை, நூலகம், மருத்துவ நிலையம், வைத்தியசாலை, தபாற்கந்தோர், தொலைபேசி, வங்கி, கூட்டுறவுச்சங்கம், மரக்கறி மற்றும் மீன் விற்பனை நிலையம், சலூன், மின்சாரம், சிறுவர் பூங்கா, தொழிற் பயிற்சி நிலையம், நடமாடும் மருத்துவமுகாம் உள்ளிட்ட சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட மீள்குடியேற்ற வேலைத்திட்டங்களுடன் படிப்படியாக நிவாரணக் கிராமங்கள் மூடப்பட்டு மீள்குடியேற்ற வேலைத்திட்டங்களை திறம்பட முன்னெடுத்துச் செல்வதற்கு அமைச்சினால் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. 2012 ஆம் ஆண்டளவில் கதிர்காமர் மற்றும் ஆனந்தகுமாரசுவாமி நிவாரணக் கிராமங்களில் தங்கியிருந்த மக்கள் 2012 செப்டெம்பர் மாதம் 24 ஆந் திகதியளவில் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டு இந்நிவாரணக் கிராமங்கள் மூடப்பட்டுள்ளன.

**நிவாரணக்கிராமங்களின் பராமரிப்பு**

2012ம் வருடம் வரையில் நிவாரணக் கிராமங்களை பராமரிப்புச் செய்யும் முகமாக ரூபா. 57 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதற்கமைய நிவாரணக் கிராமங்களில் தங்கியிருந்தவர்களுக்குத் தேவையான வீடமைப்பு, உணவு (சமைத்த, உலர் உணவு), குடிநீர், மலசலகூடம், பாடசாலை, முன்பள்ளி, நூலகம், மருத்துவ நிலையம், வைத்தியசாலை, தபாற்கந்தோர், தொலைபேசி, வங்கி, கூட்டுறவுச்சங்கம், மரக்கறி மற்றும் மீன் விற்பனை நிலையம், சலூன், மின்சாரம், சிறுவர் பூங்கா, தொழிற் பயிற்சிநிலையம், நடமாடும் மருத்துவமுகாம் உள்ளிட்ட வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## வருடாந்த வேலைத்திட்ட இலக்கும் வெளியீடும் - 2012

| தொ.இல | வெளியீடு | இலக்கு | 31.12.2012 இன் படி உண்மையான வெளியீடு |
|---|---|---|---|
| | **கட்டப்பட்ட நிரந்தர வீடுகளின் எணணிக்கை** | | |
| 1 | வெலிஓயா வீட்டுத் திட்டம் | 500 | 210 |
| 2 | கேப்பாபிலவு வீட்டுத் திட்டம் | 50 | 50 |
| 3 | சீதனவெளி வீட்டுத் திட்டம் | 56 | 56 |
| 4 | கோம்பாவில் தற்காலிக வீட்டுத் திட்டம் | 200 | 200 |
| | **மொத்தம்** | **806** | **516** |
| | **கட்டப்பட்ட நிரந்தர மலசலகூடங்களின் எண்ணிக்கை** | | |
| 1 | வெலிஓயா | 108 | 108 |
| 2 | கேப்பாபிலவு | 90 | 90 |
| 3 | கோம்பாவில் | 200 | 200 |
| | **மொத்தம்** | **398** | **398** |
| | **கட்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை** | | |
| 1 | கேப்பாபிலவு | 15 | 15 |
| 2 | தென்னமரவடி | 6 | 6 |
| 3 | வெலிஓயா | 4 | 3 |
| | **மொத்தம்** | **25** | **25** |
| | மீள் குடியேற்றப்பட்ட உள்ளக இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை | 9,064 | 38,025 |
| | பணம் வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | 2,000 | 4,243 |
| | மீளத் திரும்பிய அகதிகளின் மீள் குடியேற்ற எண்ணிக்கை | 1,500 | 1,291 |
| | **நடத்தப்படும் முகாம்களின் எண்ணிக்கை** | | |
| | யாழ்ப்பாணம் | 39 | 39 |
| | திருகோணமலை | 3 | 3 |
| | **மொத்தம்.** | **42** | **42** |
| | **சமைத்த உணவு பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை** | | |
| | யாழ்ப்பாணம் | 1,798 | 1,798 |
| | முல்லைத்தீவு | 6,543 | 6,543 |
| | **மொத்தம்.** | **8,341** | **8,341** |
| | **உள்ளக வீதிகள் (கிமீ)** | | |
| | முல்லைத்தீவில் இருந்து கேப்பாபிலவிற்கு | 7 | 7 |
| | **அழிக்கப்பட்ட காடுகளின் எண்ணிக்கை (ஏக்கரில்)** | | |
| | முல்லைத்தீவு | 200 | 200 |
| | **மீள் குடியேற்ற உதவி** | | |
| | கெலேபோகஸ்வெவ கிராமம் - 150 குடும்பங்கள் | | 3.45மி |

# ஒதுக்கீட்டுக் கணக்கு - 2012

செலவினத் தலைப்பு இல.: 145 அமைச்சு : மீள்குடியேற்ற அமைச்சு

| வருடாந்த மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்ட இல: | வரவு செலவு மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத் தலைப்பு | (1) வரவு செலவு மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | (4) மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (4-5) | பக்க இல.(டிஜிஎஸ்ஏ 2 படிவத்திற்கு தொடர்புடைய குறிப்பு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| | **மீண்டுவரும்** | | | | | | | |
| 1 | செயல்முறைச் செயற்பாடுகள் | 138,020,000 | 0 | 0 | 138,020,000 | 130,823,183 | 7,196,817 | **2** |
| 2 | அபிவிருத்திச் செயற்பாடுகள் | 134,535,000 | 0 | -46,650,000 | 87,885,000 | 69,308,129 | 18,576,871 | **3** |
| | **உபமொத்தம் (மீண்டுவரும்)** | **272,555,000** | **0** | **-46,650,000** | **225,905,000** | **200,131,312** | **25,773,688** | |
| | **மூலதனம்** | | | | | | | |
| 1 | செயல்முறைச் செயற்பாடுகள் | 15,950,000 | 9,420,155 | 5,200,000 | 30,570,155 | 27,649,073 | 2,921,082 | **2** |
| 2 | அபிவிருத்திச் செயற்பாடுகள் | 193,100,000 | 144,472,400 | 41,450,000 | 379,022,400 | 318,121,786 | 60,900,614 | **3** |
| | **உபமொத்தம் (மூலதனம்)** | **209,050,000** | **153,892,555** | **46,650,000** | **409,592,555** | **345,770,859** | **63,821,696** | |
| | **மொத்தக் கூட்டுத்தொகை** | **481,605,000** | **153,892,555** | **0** | **635,497,555** | **545,902,171** | **89,595,384** | |

# நிகழ்ச்சித்திட்ட ரீதியான ஒதுக்கீட்டுக் கணக்கு - 2012

செலவினத் தலைப்பு இல.: 145 அமைச்சு : மீள்குடியேற்ற அமைச்சு

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 செயல்முறைச் செயற்பாடுகள்

## மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்தின் பொழிப்பு

| டிஜிஎஸ்ஏ படிவத்தில் குறிப்பிட்ட செலவினத்தின் தன்மை | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | பக்க இல.(டிஜிஎஸ்ஏ படிவத்திற்கு தொடர்புடைய குறிப்பு) |
|---|---|---|---|---|---|---|---|
| | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (4-5) | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | ரூபா | |
| (அ) மீண்டுவரும் (டிஜிஎஸ்ஏ3) | 138,020,000 | | | 138,020,000 | 130,823,183 | 7,196,817 | **1** |
| (ஆ) மூலதனம் (டிஜிஎஸ்ஏ4) | 15,950,000 | 9,420,155 | 5,200,000 | 30,570,155 | 27,649,073 | 2,921,082 | **1** |
| மொத்தம் | **153,970,000** | **9,420,155** | **5,200,000** | **168,590,155** | **158,472,256** | **10,117,899** | |

# நிகழ்ச்சித்திட்ட ரீதியான ஒதுக்கீட்டுக் கணக்கு - 2012

செலவினத் தலைப்பு இல.: 145 அமைச்சு : மீள்குடியேற்ற அமைச்சு

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 02 அபிவிருத்திச் செயற்பாடுகள்

## மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்தின் பொழிப்பு

| டிஜிஎஸ்ஏ படிவத்தில் குறிப்பிட்ட செலவினத்தின் தன்மை | (1) வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | (4) மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (4-5) | பக்க இல.(டிஜிஎஸ்ஏ படிவத்திற்கு தொடர்புடைய குறிப்பு) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | ரூபா | |
| (அ) மீண்டுவரும் (டிஜிஎஸ்ஏ3) | 134,535,000 | | -46,650,000 | 87,885,000 | 69,308,129 | 18,576,871 | **1** |
| (ஆ) மூலதனம் (டிஜிஎஸ்ஏ4) | 193,100,000 | 144,472,400 | 41,450,000 | 379,022,400 | 318,121,786 | 60,900,614 | **1** |
| மொத்தம் | **327,635,000** | **144,472,400** | **-5,200,000** | **466,907,400** | **387,429,915** | **79,477,485** | |

# கருத்திட்ட ரீதியான மீண்டுவரும் செலவினம்

செலவினத் தலைப்பு இல.: 145 அமைச்சு : மீள்குடியேற்ற அமைச்சு

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 1 - 2 அமைச்சர் அலுவலகம் அமைச்சு அலவலகம்

| கருத்திட்ட இல. தலைப்பு மற்றும் வேதனாதிகள், அனைத்து கருத்திட்டங்களுக்குமான ஏனைய கட்டணங்கள் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் ± | நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் ± | மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கருத்திட்ட இல 01 & தலைப்பு அமைச்சர் அலுவலகம் | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 17,200,000 | | | 17,200,000 | 16,555,378 | 644,622 |
| ஏனைய கட்டணங்கள் | 27,400,000 | | | 27,400,000 | 25,542,375 | 1,857,625 |
| **உப மொத்தம்** | **44,600,000** | **0** | **0** | **44,600,000** | **42,097,753** | **2,502,247** |
| கருத்திட்ட இல 02 & தலைப்பு அமைச்சு அலவலகம் | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 36,700,000 | | | 36,700,000 | 34,507,592 | 2,192,408 |
| ஏனைய கட்டணங்கள் | 56,720,000 | | | 56,720,000 | 54,217,838 | 2,502,162 |
| **உப மொத்தம்** | **93,420,000** | 0 | 0 | 93,420,000 | 88,725,430 | 4,694,570 |
| **மொத்தத் தொகை** | **138,020,000** | **0** | **0** | **138,020,000** | **130,823,183** | **7,196,817** |

# கருத்திட்ட ரீதியான மீண்டுவரும் செலவினம்

செலவினத் தலைப்பு இல.: 145 அமைச்சு : மீள்குடியேற்ற அமைச்சு

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 2-3 போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள் குடியமர்த்தல் நிகழ்ச்சி திட்டம்

| கருத்திட்ட இல. தலைப்பு மற்றும் வேதனாதிகள், அனைத்து கருத்திட்டங்களுக்குமான ஏனைய கட்டணங்கள் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் ± | நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் ± | மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கருத்திட்ட இல 2-3 & தலைப்பு போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள் குடியமர்த்தல் நிகழ்ச்சி திட்டம் | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 27,325,000 | | | 27,325,000 | 9,885,243 | 17,439,757 |
| ஏனைய கட்டணங்கள் | 107,210,000 | | -46,650,000 | 60,560,000 | 59,422,886 | 1,137,114 |
| **உப மொத்தம்** | **134,535,000** | **0** | **-46,650,000** | **87,885,000** | **69,308,129** | **18,576,871** |
| | | | | | | |
| **மொத்தத் தொகை** | **272,555,000** | **0** | **-46,650,000** | **225,905,000** | **200,131,312** | **25,773,688** |

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல.: 145 அமைச்சு : மீள்குடியேற்ற அமைச்சு

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 செயல்முறைச் செயற்பாடுகள்

கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் : 01 அமைச்சர் அலுவலகம்

| விடயக் குறியீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | நி.பி. 66, நி.பி. 69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2001 | | 11 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 300,000 | | **300,000** | 200,000 | 100,000 |
| 2002 | | 11 | இயந்திரமும் உபகரணமும் | 400,000 | | **400,000** | | 400,000 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 1,000,000 | | **1,000,000** | 999,955 | 45 |
| 2101 | | 11 | வாகனங்கள் | | 9,420,155 | **9,420,155** | 9,420,154 | 1 |
| 2102 | | 11 | தளபாடமும் அலுவல உபகரணமும் | 500,000 | | **500,000** | 483,049 | 16,951 |
| 2103 | | 11 | இயந்திரமும் உபகரணமும் | 500,000 | | **500,000** | 452,695 | 47,305 |
| | | | மொத்தம் | **2,700,000** | **9,420,155** | **12,120,155** | **11,555,853** | **564,302** |

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல.: 145 அமைச்சு : மீள்குடியேற்ற அமைச்சு

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 செயல்முறைச் செயற்பாடுகள்

கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் : 02 அமைச்சு அலுவலகம்

| விடயக் குறியீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | நி.பி. 66, நி.பி. 69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2002 | | 11 | இயந்திரமும் உபகரணமும் | 500,000 | | **500,000** | 207,000 | 293,000 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 1,750,000 | | **1,750,000** | 1,749,935 | 65 |
| 2101 | | 11 | வாகனங்கள் | | 13,200 | **13,200** | 13,170 | 30 |
| 2102 | | 11 | தளபாடமும் அலுவல உபகரணமும் | 200,000 | -13,200 | **186,800** | 99,338 | 87,462 |
| 2103 | | 11 | இயந்திரமும் உபகரணமும் | 500,000 | | **500,000** | 494,190 | 5,810 |
| 2401 | | 11 | பயிற்சியும் கொள்திறன் கட்டுமானமும் | 300,000 | | **300,000** | 218,500 | 81,500 |
| 2502 | | 11 | சென்ற வருட தொடர்ச்சி - மட்டக்களப்பு | | 5,200,000 | **5,200,000** | 4,218,738 | 981,262 |
| 2502 | | 11 | ஏனைய முதலீடுகள் தேசத்துக்கு மகுடம் | 10,000,000 | | **10000000** | 9,092,349 | 907,651 |
| | | | **மொத்தம்** | **13,250,000** | **5,200,000** | **18,450,000** | **16,093,220** | **2,356,780** |

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல.: 145 அமைச்சு : மீள்குடியேற்ற அமைச்சு

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 02 அபிவிருத்திச் செயற்பாடுகள்

கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் : 03 போரினால் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கான மீள் குடியமத்தல் நிகழ்ச்சி திட்டங்கள்

| விடயக் குறியீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | நி.பி. 66, நி.பி. 69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2002 | | 11 | இயந்திரமும் உபகரணமும் | 400,000 | | **400,000** | 68,890 | 331,110 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 200,000 | | **200,000** | 199,359 | 641 |
| 2102 | | 11 | தளபாடமும் அலுவல உபகரணமும் | 300,000 | | **300,000** | 300,000 | 0 |
| 2103 | | 11 | இயந்திரமும் உபகரணமும் | 1,000,000 | -540,000 | **460,000** | 450,000 | 10,000 |
| 2401 | | 11 | பயிற்சியும் கொள்திறன் கட்டுமானமும் | 200,000 | | **200,000** | 80,000 | 120,000 |
| 2502 | 1 | 11 | ஏனைய முதலீடுகள் | | 41,990,000 | **41,990,000** | 41,959,991 | 30,009 |
| 2502 | 2 | 14 | புத்தளம் | 170,000,000 | | **170,000,000** | 114,000,000 | 56,000,000 |
| 2502 | 2 | 17 | புத்தளம் | 21,000,000 | | **21,000,000** | 21,000,000 | 0 |
| 2502 | 7 | 13 | யு.என்.எச்.சீ.ஆர் | | 31,170,000 | **31,170,000** | 26,761,311 | 4,408,689 |
| 2502 | 10 | 13 | இந்திய அரசு | | 10,656,400 | **10,656,400** | 10,656,400 | 0 |
| 2502 | 11 | 11 | வெலியோயா மீள்குடியேற்ற திட்டம் | | 102,646,000 | **102,646,000** | 102,645,835 | 165 |
| | | | மொத்தம் | **193,100,000** | **185,922,400** | **379,022,400** | **318,121,786** | **60,900,614** |

# செலவினத்தை நிதிப்படுத்துதல் பொழிப்பு

( மூலதன மற்றும் மீண்டுவரும் செலவின மொத்தம் )

**அமைச்சு : மீள்குடியேற்ற அமைச்சு**

**செலவினத் தலைப்பு இல.: 145**

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 1- 2 செயல்முறைச் செயற்பாடுகள் / அபிவிருத்திச் செயற்பாடுகள்**

| நிதிப்படுத்தல். | | நிகழ்ச்சித்திட்டம் 01* | | நிகழ்ச்சித்திட்டம் 02* | | மொத்தம் | | செலவின வீதம் (6/5)*100 |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | மூலம் | தேறிய ஏற்பாடு** | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு** | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 11 | உள்நாட்டு நிதி | 168,590,155 | 158,472,256 | 234,081,000 | 215,012,204 | 402,671,155 | 373,484,460 | 93 |
| 12 | வெளிநாட்டுதவி - கடன் | | | | | - | - | - |
| 13 | வெளிநாட்டுதவி - மானியம் | | | 41,826,400 | 37,417,711 | 41,826,400 | 37,417,711 | 89 |
| 14 | மீள் செலுத்தவேண்டிய வெளிநாட்டுதவி - கடன் | | | 170,000,000 | 114,000,000 | 170,000,000 | 114,000,000 | 67 |
| 15 | மீள் செலுத்தவேண்டிய வெளிநாட்டுதவி - மானியம் | | | | | - | - | - |
| 16 | எதிர்மறை நிதி | | | | | - | - | - |
| 17 | உள்நாட்டு நிதியுடன் தொடர்பான வெளிநாட்டுதவி | | | 21,000,000 | 21,000,000 | 21,000,000 | 21,000,000 | 100 |
| 21 | விஷேட சட்ட சேவைகள் | | | | | - | - | - |
| | **மொத்தம்** | **168,590,155** | **158,472,256** | **466,907,400** | **387,429,915** | **635,497,555** | **545,902,171** | **86** |

# செலவினத்தை நிதிப்படுத்துதல்

(நிகழ்ச்சித்திட்டமொன்றின் கருத்திட்டங்கள் மூலம்)

**அமைச்சு : மீள்குடியேற்ற அமைச்சு**

**செலவினத் தலைப்பு இல.: 145**

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 1 செயல்முறைச் செயற்பாடுகள்**

| நிதிப்படுத்தல். | | நிகழ்ச்சித்திட்டம் 01 | | நிகழ்ச்சித்திட்டம் 02 | | நிகழ்ச்சித்திட்டம் 03 | | நிகழ்ச்சித்திட்டமொத்தம் / பக்க மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | மூலம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **11** | உள்நாட்டு நிதி | 56,720,155 | 53,653,606 | 111,870,000 | 104,818,650 | 0 | 0 | 168,590,155 | 158,472,256 |
| **12** | வெளிநாட்டுதவி - கடன் | | | | | | | 0 | 0 |
| **13** | வெளிநாட்டுதவி - மானியம் | | | | | | | 0 | 0 |
| **14** | மீள் செலுத்தவேண்டிய வெளிநாட்டுதவி - கடன் | | | | | | | 0 | 0 |
| **15** | மீள் செலுத்தவேண்டிய வெளிநாட்டுதவி - மானியம் | | | | | | | 0 | 0 |
| **16** | எதிர்மறை நிதி | | | | | | | 0 | 0 |
| **17** | உள்நாட்டு நிதியுடன் தொடர்பான வெளிநாட்டுதவி | | | | | | | 0 | 0 |
| **21** | விஷேட சட்ட சேவைகள் | | | | | | | 0 | 0 |
| | மொத்தம் | **56,720,155** | **53,653,606** | **111,870,000** | **104,818,650** | **0** | **0** | **168,590,155** | **158,472,256** |

# செலவினத்தை நிதிப்படுத்துதல்

(நிகழ்ச்சித்திட்டமொன்றின் கருத்திட்டங்கள் மூலம்)

**அமைச்சு : மீள்குடியேற்ற அமைச்சு**

**செலவினத் தலைப்பு இல.:** 145

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:** 2 அபிவிருத்திச் செயற்பாடுகள்

| நிதிப்படுத்தல். | | நிகழ்ச்சித்திட்டம் 01 | | நிகழ்ச்சித்திட்டம் 02 | | நிகழ்ச்சித்திட்டம் 03 | | நிகழ்ச்சித்திட்டமொத்தம் / பக்க மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | மூலம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **11** | உள்நாட்டு நிதி | | | | | 234,081,000 | 215,012,204 | 234,081,000 | 215,012,204 |
| **12** | வெளிநாட்டுதவி - கடன் | | | | | | | - | - |
| **13** | வெளிநாட்டுதவி - மானியம் | | | | | 41,826,400 | 37,417,711 | 41,826,400 | 37,417,711 |
| **14** | மீள் செலுத்தவேண்டிய வெளிநாட்டுதவி - கடன் | | | | | 170,000,000 | 114,000,000 | 170,000,000 | 114,000,000 |
| **15** | மீள் செலுத்தவேண்டிய வெளிநாட்டுதவி - மானியம் | | | | | | | - | - |
| **16** | எதிர்மறை நிதி | | | | | | | - | - |
| **17** | உள்நாட்டு நிதியுடன் தொடர்பான வெளிநாட்டுதவி | | | | | 21,000,000 | 21,000,000 | 21,000,000 | 21,000,000 |
| **21** | விஷேட சட்ட சேவைகள் | | | | | | | - | - |
| | **மொத்தம்** | **0** | **0** | **0** | **0** | **466,907,400** | **387,429,915** | **466,907,400** | **387,429,915** |

# மீள்குடியேற்ற அமைச்சு

## அரச உத்தியோகத்தர்களுக்கான கடன் முற்கொடுப்பனவு (ஆ) இணக்கக்கூற்று நி.பி 506(1) 31.12.2012

| விபரங்கள் | செலவுகளின் உச்ச எல்லை | செலவுகளின் இழிவு எல்லை | வரவு மீதியன் உச்ச எல்லை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஒதுக்கீட்டுச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் | **4,000,000.00** | **2,500,000.00** | **13,000,000.00** |
| 2012 ஆம் வருடத்துக்கான உண்மையான வரவு செலவு | 2,861,395.00 | 3,017,028.81 | |
| 2012 ஆம் வருடத்துக்கான உண்மையான குறுக்குப் பதிவு | 705,608.00 | 2,517,727.50 | |
| | | | |
| மொத்தம் | **3,567,003.00** | **5,534,756.31** | **9,110,270.59** |

# மீள் குடியேற்ற அமைச்சு

## 31.12.2012 ல் ஆன தனிப்பட்ட கணக்கு மீதிகளின் சாராம்சம்

**வகை இல: 145011**

| விபரங்கள் | தொகை (ரூபா) | மொத்தம் (ரூபா) |
|---|---|---|
| **திணைக்களத்தில் கடமை புரியும் அலுவலகர்களிடம் இருந்து வரவேண்டிய தொகை** | | |
| அமைச்சு | 8,162,946.84 | |
| மாவட்ட அலுவலர்கள் | 1,079,258.91 | **9,242,205.75** |
| தனிப்பிட்ட மீதிகளின் கூட்டுத் தொகை | | - |
| கழி - நி.பி. 503 செம்மையாககல் | | 9,919.16 |
| **திணைக்களப் புத்தகத்தின்படி தனிப்பட்ட வரவு மீதிகளின் கூட்டுத்தொகை** | | **9,232,286.59** |

## மீள் குடியேற்ற அமைச்சு

அரச உத்தியோகத்தர்களின் கடன் முற் கொடுப்பனவு சம்பந்தமான கட்டுப்பாட்டு கணக்கு

| விபரங்கள் | திணைக்களப் புத்தகத்திற்கு அமைவாக<br>ரூபா | திறைசேரி கணணி அச்சுப் பதிவின் படி<br>ரூபா |
|---|---|---|
| முன் கொண்டுவரப்பட்ட மீதி 01.01.2012 | **11,200,039.90** | **11,078,023.90** |
| கூட்டுக | | |
| 145011 படி பண வருமதி | 2,861,395.00 | 2,861,395.00 |
| 145012 குறுக்குப்பதிவின்படி வருமதி | 705,608.00 | 705,608.00 |
| 2012 ஆம் வருடத்திற்கான மொத்த வருமதி | **3,567,003.00** | **3,567,003.00** |
| கழிக்குக | | |
| 145011 இன் படி சென்மதி | 3,017,028.81 | 3,017,028.81 |
| 145012 குறுக்குப்பதிவின்படி டிசன்மதீ | 2,517,727.50 | 2,517,727.50 |
| 2012 ஆம் வருடத்திற்கான மொத்த சென்மதி | **5,534,756.31** | **5,534,756.31** |
| 2012 ஆம் வருட இறுதியின் மீதி- 31.12.2012 | **9,232,286.59** | **9,110,270.59** |

அரச உத்தியோகத்தர்களுக்கான முற் கொடுப்பனவு சம்பந்தமாக அலுவலக மற்றும் திறைசேரிப் புத்தகங்களுக்கிடையிலான இணக்கக்கூற்று

| விபரம் | | ரூபா |
|---|---|---|
| அலுவலகப் புத்ததகங்களின் படி 31.12.2012 க்கான வரவு மீதி | | 9,232,286.59 |
| கழி - நி.பி 503 | | 122,016.00 |
| திறைசெரி கணணீ அச்சுப் பதிவின்படி வரவு மீதி- 31.12.2012 | | **9,110,270.59** |

# கணக்காய்வு விசாரணை

## ஒதுக்கீட்டுக் கணக்கு – 2012

தலைப்பு இல. 145 மீள்குடியேற்ற அமைச்சு

1) நிதிப்பிரமாணம் 50(b) இன் பிரகாரம் பூரணமானதும், சரியானதுமான மதிப்பீட்டறிக்கையை தயாரிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2012 வரவு செலவு மதிப்பீட்டுடன் உண்மையான செலவை ஒப்பிடும்போது 12 கருத்திட்டங்கள் 23%-92% வரையான சேமிப்புகள் இருந்ததை அவதானிக்க முடிந்தது..

2) 15 கருத்திட்டங்களில் பொறுப்பாக உள்ள மொத்தத் தொகை ரூபா 1,555,812 ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்படவில்லை.

3) நடப்பாண்டு முடிவில் 13 கருத்திட்டங்களில் உள்ள சேமிப்பு ரூபா 147,005 எனக்காட்டப்பட்ட போதிலும் அத்தினத்தில் அக்கருத்திட்டங்களுக்கான பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 1,505,814 ஆகும். இதன்படி வருட இறுதியிலான வாக்களிக்கப்பட்ட செலவு, ஒதுக்கீட்டைவிட ரூபா 1,358,809 ஆல் விஞ்சியுள்ளது.

4) 1978 டிசெம்பர் 19 ஆம் திகதியிலான திறைசேரி சுற்றறிக்கை இல. 842 ன் பிரகாரம்நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு ஒன்றை பராமரித்தல் வேண்டும். ஆனாலும் ரூபா 114,617,018 பெறுமதியான அமைச்சின் நிரந்தர சொத்துக்கள் மேற்படி பதிவேட்டில் காட்டப்படவில்லை.

5) நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் வைப்புப் பதிவேட்டில் உள்ள 2 வருடத்துக்கு மேலான காலாவதியான வைப்புக்கள் அரச வருமான கணக்கிற்கு மாற்றீடு செய்யப்படவேண்டும். ஆனாலும் அமைச்சின் வைப்புக் கணக்கில் ரூபா 7,959,996 தொகையை 2 வருட காலத்திற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்படாமல் அரசிறைக்கு மாற்றீடு செய்யயாமல் வைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு :-

2011 இல.52 ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது உப அட்டவணையின் 145 ஆம் தலைப்பிற்கு அமைய மீள் குடியேற்ற அமைச்சின் 2012 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோஸலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகளின் பிரிவு 150 மற்றும் 2012 நவம்பர் 26 ஆம் திகதி 227/2012 இலக்கத்தைக் கொண்ட அரச கணக்குகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த ஒதுக்கீட்டுக் கணக்கு திறைசேரியின் பிரசுரிக்கப்பட்ட கணணிக் கூற்று, வரவு செலவு மதிப்பீடு, அலுவலகப் புத்தகங்கள் ஏடுகள் மற்றும் அறிக்கைகளுடன் பரிசீலிக்கப்பட்டதுடன், அக் கணக்குகளுக்கான கணக்காய்வின் அவதானிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. செலவீனத் தலைப்புக்கான கணக்காய்வின் அவதானிப்பு இலங்கை சனநாயக சோஸலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) பிரமாணங்களுக்கமைய விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

……………………………………….

பிரதிக் கணக்காய்வாளர் நாயகம்

கணக்காய்வாளர் நாயகத்திற்காக

2013,ஆனி 11ஆம் திகதி

கணக்காய்வாளர் திணைக்களத்தில்

கணக்காய்வாளர் நாயகம்,

கணக்காய்வுத்திணைக்களம்,

பொல்துவ வீதி,

பத்தரமுல்ல.

**தலைப்பு – 145 கணக்காய்வுக்கான விடையளித்தல். – 2012.**

தங்களது கணக்காய்வு இல: DE/G/RM/VV/2012 மற்றும் 2013.05.29ம் திகதிய கணக்காய்வு சம்பந்தமாக. மேற்படி விடயம் தொடர்பில் எனது கருத்தினைக் கீழ் குறிப்பிடுகின்றேன்.

01. மதிப்பீடு தயாரிப்பதிலுள்ள குறைபாடுகள்.

2012ஆம் ஆண்டில் முகம் கொடுத்த விசேட காரணங்களினால் சில செலவின ஒதுக்கீடுகளில் மீதம் ஏற்பட்ட போதும் அது முழுமையாக அதிக பட்ச மதிப்பீட்டினால் ஏற்பட்டதொன்றல்ல. அரச செலவினங்களை முகாமைத்துவப்படுத்தும் நோக்கில் தேசிய வரவு செலவுத் திணைக்களம் மூலம் வெளியிடப்பட்டுள்ள இல:155 க் கொண்ட தேசிய வரவு செலவு சுற்று நிருபத்தின் பிரகாரம் நடைமுறைச்செலவின ஒதுக்கீட்டில் 2மூ வீதமும் மூலதன ஒதுக்கீட்டில் 9மூ வீதமும் மீதப்படுத்தப்படல் வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் சில நடைமுறை காரணங்களின் பேரில் சகல செலவின விடையங்களிலும் மீதப்படுத்த முடியாததால் சகல நடைமுறைச்செலவின ஒதுக்கீடுகளின் 2மூ வீதமும் முழுமையான மூலதன ஒதுக்கீட்டின் 9மூ வீதமும் கணகீட்டு வருட இறுதியில் மீதப்படலாம் எனக் கருதப்படக்கூடிய செலவின விடயங்கள் சிலவற்றினால் மீதத்தை ஏற்படுத்தக் கூடியவாறு மீள் திருத்தப்பட்ட மதிப்பீடொன்றைத் தயாரித்து அதற்கமைய செலவினம் முகாமைத்துவப்படுத்தப்பட்டது. தங்களது இலகு பார்வைக்காக அதன் பிரதி ஒன்று இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன். அதன் பிரகாரம் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில செலவின விடயங்களில் மீதம் காட்டப்படுவதுடன் குறிப்பிட்ட அளவையும் தாண்டி சில செலவினங்களில் மீதம் ஏற்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ஒதுக்கீட்டில் மீதம் ஏற்படுவதற்கு வழிகோரிய முக்கிய காரணியாக அமைந்ததாவது இவ்வமைச்சின் கீழிருந்த புத்தளம் வீடமைப்புத்திட்டம் 2012 ஆம் ஆண்டு முடிவுற்றதால் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வளங்கள் அமைச்சின் பாவனைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டமையாகும். எனவே முன்பு திட்டமிடப்பட்டிருந்த புதிய பொருட்களை கொள்வனவு செய்யவோ திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையோ ஏற்படவில்லை. அந்நிலை உரிய செலவின விடயங்களின் ஒதுக்கீட்டில் மீதம் ஏற்பட ஏதுவாயிற்று.

02. வைப்பு.

வைப்புக்குறிப்பு இல்லாமை.

2012 கணக்கு வைப்பு அறிக்கை தயாரிக்கும் போது ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக இக்கணக்கு வைப்புக்குறிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

03. வைப்புச் செய்வதற்கு மீதியின் அளவு போதாமை.

2012ம் வருடம் உரிய மதிப்பீட்டு ஒதுக்கீட்டைத்தாண்டி பொறுப்பேற்கவேண்டி வருவதற்கு பலதரப்பட்ட செயல் ரீதியான மற்றும் அரச கடமைகளுக்கேற்ப அமைச்சின் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு முக்கியமாக எடுக்கவேண்டிய பொருள்கள் மற்றும் சேவை வளங்க வேண்டியேற்பட்டபோது அச்சந்தர்ப்பத்தைப் பொறுத்து முகாமைத்துவம் தீர்மானங்களை மேற்கொண்டதாகும். எவ்வாறாயினும் எதிர்வரும் காலங்களில் ஒவ்வொரு வருடத்திற்குமுரிய செலவினம் அந்த வருடத்திலேயே தீர்த்துவைப்பதன் மூலம் ஒதுக்கீட்டு முகாமைத்துவத்தை ஏற்படுத்த முழுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

04. நிலையான சொத்துக்களின் ஏடு.

2013.02.27 ந்திகதி அமைச்சின் நிலையான சொத்துக்களின் ஏடு அரச கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இலகு பார்வைக்காக அக்கடிதத்தின் பிரதியை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

05. பொதுவைப்புக்கணக்கு.

நி.பி. 571(2) பந்திக்கு அமைய வைப்புக்கணக்கின் இரண்டு வருடங்களைக் கடந்த வைப்பு 2013 மே மாத அரச வருமானத்தில் வைப்புச்செய்யப்பட்டுள்ளது.

ஜனக சுகததாஸ,
செயலாளர்,
மீள்குடியேற்ற அமைச்சு.